# அறிமுகம்

சவுதி அரேபியாவின் காலஞ்சென்ற மன்னர் பஹத் அவர்கள், இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் அரபு குர்-ஆனில் இருந்து அனைத்து உலக மொழிகளிலும் குர்-ஆனை மொழிபெயர்க்கும் மொழிப்பெயர்ப்பாளர்களுக்கும் நான் நன்றி உள்ளவனாக இருக்கிறேன். என் தாய் மொழியில் குர்-ஆனை படிப்பதில் பெருமகிழ்சியடைகிறேன். உலகத்தில் 20%க்கும் குறைவாகத்தான் முஸ்லீம்கள் அரபு மொழியை தன் தாய் மொழியாகக் கொண்டுள்ளனர். யாரோ ஒருவர்தான் குர்-ஆனை அவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதை கேட்கும்போது என் இதயம் வேதனையடைகிறது. யாரோ ஒருவர் குர்-ஆனை புரிந்து கொண்டதின் அடிப்படையிலேயே இவர்கள் அதை கேட்கிறார்கள். இன்றைக்கு அது அவசியமில்லை.

அல்லாஹ் தன் தூய செய்தியை நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று விரும்புகிறார். அல்லாஹ் சொல்வது நமக்கு புரியவில்லையென்றால் நாம் எப்படி அவருக்கு கீழ்ப்படிய முடியும்? முகம்மது ஸல்லல்லாஹீ அலைஹி வஸல்லம் நபிக்கு முன்பு வாழ்ந்த முஸ்லீம்களின் மொழியிலேயே அல்லாஹ் அவர்களோடு பேசினபடியால் அவர் பேசியதை அவர்கள் புரிந்து கொண்டனர். அல்லாஹ்வின் செய்தியை தெளிவாக புரிந்து கொள்ள கீழ்க்கண்ட சம்பவம் உதவியாக இருக்கும்.

இந்தியாவில் துணி தொழிற்சாலை நடத்தும் ஒரு அரேபிய முதலாளி தன் தொழிற்சாலை ஊழியர்களுக்கு சிகப்பு நிற சட்டையை தைக்காமல் மஞ்சள் நிற சட்டையை தைக்கும்படியும், அவர்களின் கடின உழைப்பிற்கு போனசும் தருவேன் என்றும் அரபு மொழியில் ஒரு கடிதம் எழுதினார். அரபு முதலாளிக்கு உருதோ, இந்தியோ பேசத்தெரியாது. ஆனால் அவருடைய இந்திய அலுவலகரான மேனேஜருக்கு அரபு, உருது மற்றும் இந்தி மொழிகள் தெரியும்.

அரபு மொழியில் அந்த கடிதம் வந்தவுடன் இந்திய அலுவலக மேனேஜர் கடிதத்தை அரபியில் வாசித்து அப்படியே கடிதத்தை மேஜையில் தொளிலாளிகளின் முன்னிலையில் வைத்துவிட்டார். கடிதத்தை பெற்றுக்கொண்டதில் தொழிலாளர்களுக்கு மிகுந்த சந்தோஷம். ஆனால் சிகப்பு நிற சட்டையை அவர்கள் மஞ்சள்



நிற சட்டையாக மாற்றி தைக்கவில்லை. இந்த தவறை முதலாளி கண்டுபிடித்த போது அலுவலக மேனேஜர் மற்றும் தொழிலாளர்களை குறித்து அவர் மிகுந்த வெறுப்படைந்தார். பிறகு தனக்கு வேலைசெய்ய புதிய மேனேஜரையும், புதிய தொழிலாளர்களையும் வைத்துக்கொள்ள முடிவு செய்தார். தன் கட்டளையை தெளிவாக புரிந்து கொள்ளுகிற தொழிலாளர்களோடு மட்டும் வேலை செய்ய அந்த அரபு முதலாளி விரும்பினார். தன் கட்டளைகளுக்கு கீழ்ப்படிகிறவர்களுக்கு கூடுதல் போனஸை தரவும் அவர் விரும்பினார்.

அல்லாஹ்வின் ஆசீர்வாதங்களை தவற விடவேண்டாம். அல்லாஹ்வின் செய்தியை சொல்ல வேறொருவரை சார்ந்திருக்கவும் வேண்டாம். உங்கள் தாய் மொழியில் ஒரு நல்ல குர்-ஆனை வாங்குங்கள், நாம் ஒன்றாக சேர்ந்து நம் வாழ்க்கையை மாற்றக்கூடிய பொக்கிஷங்களை கண்டுபிடிப்போம் வாருங்கள்.

## ஒட்டகத்தின் பாதை
## பக்கா முஸ்லீம்கள்

ஆல-இம்ரான் 3:42-55

என் தாய் மொழியில் குர்-ஆனை படிக்கும் பொழுது, என் இருதயத்தை நம்பிக்கையால் நிரப்பின ஒரு பகுதிக்கு வந்தேன். சூரா ஆல-இம்ரான்-3:42-55-ன் உண்மையை நீங்கள் பற்றிக்கொண்டால், அதே நம்பிக்கையை நீங்களும் பெறலாம். இந்த உண்மையை கண்டுபிடிக்க எல்லோருக்கும் கண்கள் இல்லையே என்று நினைக்கும் போது என் இருதயத்தில் வேதனைப்படுகிறேன். அல்லாஹ் உங்கள் கண்களை திறக்கும்படி நான் உங்களுக்காக துஆ செய்கிறேன்.

அல்மாயிதா 5:83-ஐ ஓதுங்கள் ‘‘தவிர, தூதர் மீது அருளப்பட்டவைகளை செவியுற்றால் உண்மையை **அவர்கள்** உணர்வதன் காரணமாக அவர்களின் கண்கள் கண்ணீர் வடிப்பதை காண்பீர்கள். அன்றி ‘‘எங்கள் இறைவனே! நாங்கள் நம்பிக்கை கொண்டோம். ஆகவே, சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக’’ என்றும் கூறுகின்றார்.

இந்த ஆயத்தில் **“அவர்கள்”** என்பது யாரை குறிக்கும்? எந்த ஜனங்களால் அல்லாஹ் சொல்லும் உண்மையை



கண்டுபிடிக்க முடியும்? சூரா ஆல இம்ரானில் நாம் பதிலை கண்டு பிடிப்போம்.

சூரா ஆல இம்ரான் 3:42—55-ஐ 100-க்கும் அதிகமான தடவை ஓதியிருக்கிறேன். நான் ஓதும் ஒவ்வொரு முறையும், முதல் முதலாக நான் ஓதினபோது பெற்றுக்கொண்ட அதே சந்தோஷத்தை பெற்றேன். இந்த பகுதியால் அல் ஹக்கையும் (உண்மையையும்) கண்டுபிடித்தேன், நான் கண்டுபிடித்தது ஒன்றும் புதிதானதல்ல. அநேகர் கடந்த நாட்களில் இதையே கண்டுபிடித்துள்ளனர், ஏனென்றால் அவர்களின் கண்களும் அல்ஹக்கிற்காக (உண்மை) திறந்தது. சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ படிக்கும் நூற்றுக்கணக்கான முஸ்லீம் சகோதரர்களின் கண்களும் திறக்கப்படுகிறது. இந்த உண்மையை கண்டுபிடிக்கிறவர்கள் **“பக்கா”** அல்லது **“உண்மையான”** முஸ்லீம்கள் என்று தங்களை அழைத்துக் கொள்கின்றனர்.

அல்லாஹ்தாமே சொப்பனத்தில் அநேகம் முஸ்லீம்களுக்கு சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ உறுதி செய்கிறார். சமீபத்தில் உலகின் பல இடங்களில் 600 ‘‘பக்கா’’ முஸ்லீம்களிடம் ஒரு ஆய்வு செய்யப்பட்டது, மொத்தம் 600 முஸ்லீம்களில், 150 முஸ்லீம்கள் அல்லாஹ்வின் தூதுவர் தங்கள் கனவில் தோன்றி சூரா ஆல இம்ரான் 3:42-55-ன் உண்மையை மெய்ப்படுத்தியதால் நாங்கள் ‘‘பக்கா’’ முஸ்லீம்களாக மாறினோம் என்றார்கள். சில பக்கா முஸ்லீம்கள் கண்ட சொப்பனங்களில் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை பார்த்ததாகவும், அவரே இந்த புத்தகத்தில் சொல்லப்பட்ட அலஹக்கை (உண்மையை) உறுதிப்படுத்தியதாகவும் கூறுகின்றனர்.

ஒரு தூய கித்தாப்பின் ஒரு ஆயத்து இப்படி சொல்லுகிறது, ‘‘அல்ஹக்கை (உண்மையை) அறிவீர்கள், அல்ஹக் உங்களை விடுதலையாக்கும்’’ நீங்கள் அல்ஹக்கை (உண்மையை) அறிந்து விடுதலை ஆகவேண்டுமா?

இந்த மிக அருமையான பகுதியை உங்கள் குர்-ஆனை எடுத்து ஒவ்வொரு ஆயத்தாக நீங்களாகவே ஓதுங்கள், ஒவ்வொரு ஆயத்திற்கும் என் விளக்கங்களை நான் கொடுத்துள்ளேன். உங்கள் கண்கள் திறக்கப்பட்டு நீங்கள் அல்ஹக்கை (உண்மையை) அறிந்து பக்கா முஸ்லீம் இயக்கத்தில் சேரும்படி



உங்களுக்காக நான் துஆ செய்கிறேன்.

**விளக்கம் 3:42** ‘‘மலக்குகள் கூறிய சமயத்தில்’’ மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் உங்களைத் தேர்ந்தெடுத்திருக்கின்றான். உங்களை பரிசுத்தமாகவும் ஆக்கியிருக்கின்றான். உலகத்திலுள்ள பெண்கள் அனைவரையும்விட உங்களை மேன்மையாக்கியும் வைத்திருக்கின்றான்’’

**3:43** ‘‘ஆகவே மர்யமே! நீங்கள் உங்களுடைய இறைவனுக்கு வழிப்பட்டு குனிந்து வணங்குபவர்களுடன் நீங்களும் குனிந்து (சிரம் பணிந்து) வணங்குங்கள்!’’

இன்ஜில் ஷரிப் எழுதப்படுவதற்கு முன்பு 400 வருஷங்கள் வேதத்தை யுடையோர்களுக்காக பேசுவதற்கு ஒரு நபியும் இல்லாமல் இருந்தார்கள். அல்லாஹ்வின் ஜனங்களோ நம்பிக்கை இழந்து, திடனற்று குழியின் அடித்தளத்தில் கிடந்தனர்.

துனியாவின் சரித்திரத்தில் அது ஒரு இருளான சமயம், இயல்புக்கு மிகவும் மாறாக அல்லாஹ் ஒன்றை செய்தார். ஜிப்ராயில் மலக்கு மூலம் அல்லாஹ் இளம் கன்னிப்பெண்ணாகிய மர்யமுடன் பேசினார். ஒரு சிறப்பான பணியை நிறைவேற்றுவதற்காக அல்லாஹ் உங்களை தெரிந்து கொண்டார் என்று மலக்கு கூறியது. ஆனால் முதலில் மர்யம் ஒரு உண்மையான முஸ்லீம் ஆக இருக்கும்படி தான் பெற்ற அழைப்பை உறுதி செய்து கொண்டார். அல்லாஹ்விற்கு தன்னை ஒப்புக்கொடுத்து, கீழ்படிந்திருக்கும்படி மர்யம் அவர்களுக்கு சொல்லப்பட்டது.

**3:44** ‘‘இவை மறைவான விஷயங்களாகும். இவைகளை நாம் உங்களுக்கு வஹியின் மூலம் அறிவிக்கின்றோம் அன்றி மர்யமை யார் பொறுப்பேற்றுக் கொள்வது என்று அவர்கள் தங்கள் எழுதுகோல்களை எறிந்தபோதும் நீங்கள் அவர்களுடன் இருக்கவில்லை. அவர்கள் தர்க்கித்துக் கொண்டபோதும் நீங்கள் அவர்களுடன் இருக்கவில்லை.

மலக்குகள் இடையே ஜன்னத்தில் நடைபெற்ற செயல்பாடுகளை பாக்கும்படி குர்-ஆன் நமக்கு உதவிசெய்கிறது. மர்யமை பாதுகாக்கும் மலக்காக இருக்கும்படி அனைத்து மலக்குகளும் விரும்பியதை நம்மால் பார்க்கமுடிகிறது. இந்த பிரச்சனையை தீர்த்துக்கொள்ள மலக்குகள் தங்களுக்குள்ளே

சீட்டுப்போட்டு அல்லாஹ் நியமித்த வேலைக்கு சரியான மலக்கை நியமித்தார்கள்.

ஜன்னத்தில் இதைவிட மிகவும் ஒரு ஆச்சரியமான சம்பவம் நடந்தாக நாம் குர்-ஆனில் வாசிக்க முடியாது. இந்த துனியாவின் எல்லா ஜனங்களுக்காகவும் அல்லாஹ் சிறப்பான ஒன்றை செய்தார், இதற்கு முன்போ அல்லது இப்பொழுதோ இப்படி சிறப்பான ஒன்று நடந்ததே இல்லை.

**3:45** (மேலும், மர்யமை நோக்கி) மலக்குகள் ''மர்யமே! நிச்சயமாக அல்லாஹ் தன்னுடைய (ஆகுக!என்ற) ஒரு வார்த்தையைக் கொண்டு உங்களுக்கு (ஒரு குழந்தையை அளிக்க) நற்செய்தி கூறுகின்றான்'' என்றும் ''**அதன் பெயர் அல் மஸீஹ் ஈஸா**'' (இயேசு மேசியா) இப்னு மர்யம்'' என்பதாகும். அவர் இம்மை மறுமையில் மிக்க கம்பீரமானவராகவும், (இறைவனுக்கு) மிக்க நெருங்கியவர்களில் ஒருவராகவும் இருப்பார்'' என்றும் கூறினார்கள்.

ஈஸா நபியை பெற்றெடுக்க மர்யம் தெரிந்து கொள்ளப்பட்டதை 45-ம் ஆயத்து அறிவிக்கிறது. உலகம் முழுவதிலும் உள்ள முஸ்லீம்கள் ''ஈஸாவிற்கு'' இரண்டு பெயர்களை வைத்திருக்கிறார்கள் **''ஈஸா கலிமத்துல்லாஹ்''** (அல்லாஹ்வின் வார்த்தை) மற்றும் **''ஈஸா ரூஹுல்லாஹ்''** (அல்லாஹ்வின் ஆவி) ஏன் ஈஸாவை இந்த இரண்டு பெயர்களாலே அழைக்கிறோம்? இதற்கான பதிலை சூரா ஆல இம்ரான் 3-45 மற்றும் சூரா அல் அன்பியா 21:91-ல் பார்க்கலாம். மர்யமிற்குள் அல்லாஹ் தன்னுடைய வார்த்தையை வைப்பேன் என்று கூறுகிறார். யார் அல்லது என்ன அல்லாஹ்வின் ''வார்த்தை''? இதை சரியாக புரிந்து கொள்ள சூராஅல்அன்பியா 21:91-ஐ ஓதுங்கள், ''...தன் கற்பைக் காத்துக்கொண்ட (மர்யம் என்ப) வரை (யும் நீங்கள் ஞாபகமூட்டுங்கள் . நம்முடைய தூதர்) ரூஹின் மூலம் அவருடைய கர்ப்பத்தில் நாம் ஊதினோம். அவரையும் அவருடைய மகனையும் உலகத்தாருக்கு ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்'' ''ஈஸாவை நாம் ஏன் ''ஈஸா கலிமத்துல்லாஹ்'' என்றும் ''ஈஸா ரூஹுல்லாஹ்'' என்றும் சொல்லுகிறோம்? குர்-ஆன் அதை தெளிவாக்குகிறது, ''ஈஸாவே வார்த்தை (கலீம்) மற்றும் ஆவி (ரூஹ்) யானவர். வேறு எந்த நபரும் அல்லது நபியும் இந்த பட்டத்தை பெறவில்லை.



அல்லாஹ்வின் ''வார்த்தை'' மற்றும் ஆவி மர்யமின் கர்ப்பத்தில் வைக்கப்பட்டு மாமிசமாக குழந்தையாக பிறந்தார். அல்லாஹ் மர்யமிடம் ''ஈஸா மஸீஹ்'' என்று பெயர் வைக்க சொன்னார். மஸீஹ் என்றால் அபிஷேகம் பண்ணப்பட்டவர் அல்லது வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவர், ''ஈஸா'' பிறப்பதற்கு 758 வருஷங்களுக்கு முன்பே ஏசாய நபி இவ்வாறு எழுதியிருக்கிறார், ''...இதோ, ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனைப் பெறுவாள், அவருக்கு 'இம்மானுவேல்' என்று பேரிடுவாய்'' (ஏசாயா. 7:14) இம்மானுவேல் என்ற எபிரேய வார்த்தையின் அர்த்தம் ''அல்லாஹ் நம்மோடிருக்கிறார்''

ஈஸா இம்மையிலும், மறுமையிலும் எல்லோராலும் கனப்படுத்தப்படுவார். மேலும் அவர் அல்லாஹ்விற்கே மிக்க நெருக்கமானவராகவும் இருப்பார். குர்-ஆன் ''ஈஸாவை'' அல்லாஹ்வின் வார்த்தை என்றும், அல்லாஹ்வின் ரூஹ் என்றும் ''வாக்குத்தத்தம் பண்ணப்பட்டு அபிஷேகம் பண்ணப்பட்ட ஒருவர் என்றும் (எல்லா) உலகத்தாருக்கும் ஓர் அத்தாட்சியாகவும் ஆக்கினோம்'' (அல் அன்பியா 21:91) குர்-ஆன் ஈஸாவை நமக்கு தெளிவாக படம்பிடித்துக் காட்டுகிறது. நாம் முன்பு போகாத இடத்திற்கு போக வேண்டுமானால் நம்மை வழிநடத்த ஒரு அடையாளத்தை தேடுவோம். நாம் ஈஸாவை பின்பற்றினால் எங்கே போவோம்?

**3:46** ''அன்றி அவர் தொட்டிலில் இருக்கும் பொழுதும்? வாலிபத்திலும் மனிதர்களுடன் பேசுவார். தவிர நல்லொழுக்கமுடையவர்களில் ஒருவராகவும் இருப்பார்.

'ஈஸா'வின் பிறப்பு முழு உலகத்திற்கும் ஒரு செய்தியாகவும் நல்லொழுக்கமுடைய ஒருவராகவும் இருந்தார். 'ஈஸா' எப்படி நல்லொழுக்கமுடையவர்? சூரா மர்யம் 19:19-ல் ஈஸா ஒரு பரிசுத்தமான மகனாக இருப்பார் என்று அல்லாஹ் மர்யமுக்கு சொன்னார், 'ஈஸா' யாரையும் கொலை செய்யவில்லை, ஈஸா' பணத்திற்காக ஆசைப்படவில்லை, அவர் நிக்காஹ் செய்யவில்லை. மதத்தலைவர்களிடம் காணப்பட்ட நேர்மையற்ற அசுத்தங்களுக்கு எதிராகப் பேசினார், அவர் ஒவ்வொரு நாளும் துஆ செய்தார், 40 நாட்கள் இரவும் பகலும் ஒன்றும் சாப்பிடாமல் நோன்பு இருந்தார், நமக்கு தீமை செய்பவர்களை அன்பு கூறச்



சொன்னார் என்று இன்ஜில் ஷரிப் நமக்கு போதிக்கிறது. 'ஈஸா' எப்பொழுதும் ஹராம் செய்யவே இல்லை. ஈஸா எப்பொழுதாவது ஹராம் செய்திருப்பாரானால் அவர் அல்லாஹ்வின் கலிமத்துல்லாஹ் அல்லது ரூஹுல்லாஹ்வாக அல்லாஹ்வோடு இருக்கும்படி ஜன்னத்திற்கு சென்றிருக்கவே மாட்டார். 'ஈஸா'வின் மூலம் அல்லாஹ் உலகத்திற்கு ஒரு ''பக்கா'' முஸ்லீம் எப்படி இருக்க வேண்டுமென காண்பித்தர். நாம் எல்லோரும் ஈஸாவைப் போல வாழ்ந்தால் இந்த உலகம் ஒரு அற்புதமானதாக இருக்கும்.

**3:47** (அதற்கு மர்யம்) 'என் இறைவனே! ஒருவருமே என்னைத் தீண்டாதிருக்கும்போது, எனக்கு எவ்வாறு சந்ததி ஏற்பட்டுவிடும்? என்று கூறினார். ''இவ்வாறே, அல்லாஹ் தான் நாடியதை படைக்கின்றான். அவன் ஒரு பொருளை நாடினால் அதனை 'ஆகுக' என அவன் கூறியவுடனே அது ஆகிவிடும். என்று கூறினான்.

அல்லாஹ் கொடுத்த செய்தியை கேட்டு மர்யம் அதிச்சியடைந்தார். மர்யம் அல்லாஹ்விடம், ''எனக்கு இன்னும் நிக்காஹ் (திருமணம்) ஆகவில்லை, எந்த மனிதரும் இதுவரை என்னை தொடவும் இல்லை. பின்பு எப்படி எனக்கு பிள்ளை உண்டாகும் என்று கேட்டார்'' அல்லாஹ் மர்யமிடம் மிகப் பொறுமையோடிருந்து அவருக்கு பதில் சொன்னார். ''நான் அல்லாஹ், நான் விரும்புவதை என்னால் மிகவும் சுலபமாக செய்யமுடியும்'' என்றார்.

அல்லாஹ் எதையும் விபத்தாக செய்கிறவர் அல்ல, தன்னுடைய நேர்த்தியான திட்டத்தின்படியே எல்லாவற்றையும் அல்லாஹ் செய்கிறவர். ஆல்லாஹ் **'<u>ஈஸாவை தகப்பனில்லாமல் ஏன் பிறக்க வைத்தார்?</u>** தகப்பன் இல்லாமல் பிறந்த வேறொரு நபியை உங்களுக்கு தெரியுமா? எல்லா முஸ்லீம்களுக்கும் இந்த சம்பவம் என்ன சொல்லுகிறது?

இந்த கேள்விக்கு பதில் சொல்வதற்கு ஆதமின் வாழ்க்கையை மிக அருகில் சென்று பார்க்க வேண்டும். ஆல இம்ரான் 3:59-ல் ஈஸாவுக்கு உதாரணம் ஆதமுடைய உதாரணத்தைப் போன்றதே! என்று குர்-ஆன் கூறுகிறது. இவர்கள் இருவரும் ஒரேவிதமானவர்கள். ஏனென்றால் இந்த இரண்டு நபிகளுக்கும் தகப்பன் இல்லை. ஆதம் அல்லாஹ்விற்கு கீழ்படியாமல் போனதற்கு முன்பு அச்சோலையில் (ஜன்னத்தில்) அல்லாஹ்வுடன் நடந்தார்,



அல்லாஹ்வுடன் பிரசன்னதில் ஆதம் எப்பொழுதும் இருந்து அவரோடு பேசினார். ஏனென்றால், அவர் ஈஸாவைப்போல எந்த ஹராமும் செய்யவில்லை, ஆரம்பத்தில் ஆதமும் நல்லொழுக்கமும், பரிசுத்தமும் உள்ளவராக இருந்தார். ஏனென்றால் ஆதம் அல்லாஹ்வின் ரூஹில்லாஹ்வினாலே உருவாக்கப்பட்டார். ஒரே ஒருமுறை ஆதம் அல்லாஹ்வுக்கு கீழ்படியாமல் போனார். ஆதம் இப்போது அசுத்தமாக இருப்பதினால் அல்லாஹ்வுடன் அச்சோலையில் (ஜன்னத்தில்) இருக்க முடியவில்லை.

சூரா தாஹா 20:121-ஐ வாசியுங்கள், ''ஆகவே அவ்விருவரும் (ஆதமும் அவர் மனைவியும்) அதனை புசித்துவிட்டார்கள். உடனே அவ்விருவரின் மானமும் வெளியாகவே அச்சோலையின் இலைகளைக்கொண்டு தங்களை மறைத்துக்கொள்ள முற்பட்டார்கள். ஆகவே ஆதம் தன் இறைவனுக்கு மாறு செய்து **<u>வழித்தவறிவிட்டார்</u>''**

''ஈஸா மஸிஹ்''-ஐ தவிர நிச்சயமாக நாமெல்லாரும் ஆதமின் பிள்ளைகளாய் இருக்கிறோம். பேரீச்சம் மரம் பேரீச்சம் பழத்தை தரும். பேரீச்சம் மரம் எலுமிச்சம் பழத்தை தருமா? ஆதமின் சந்ததியில் பிறந்த எல்லோரும் ஆதமின் சுபாவத்தை பெற்றிருக்கிறோம். ஆதமுடைய ஹராமின் சாபம் அவனுடைய பின் சந்ததிகளை ஹராமிற்குள்ளாக்குகிறது. ஹராமே செய்யாத ஒரே மனிதர் 'ஈஸா' மட்டுமே. அவர் ஹராம் செய்யவில்லை காரணம் அவர் ஆதமின் இரத்த சம்பந்தமான வரிசையில் வரவில்லை. ஆதமின் ஹராம் சுபாவத்தை ஈஸா சுதந்தரித்திருக்கவில்லை. ஆதமின் ஹராம் சுபாவத்தை ஈஸா பெறாமல் இருக்கும்படி அல்லாஹ் இப்படி திட்டம்பண்ணினார்.

என் நண்பர் ஒரு நாள் என்னைப்பார்த்து ''ஏன் ஈஸா தன் தாயாகிய மர்யம் மூலமாக ஆதமின் ஹராம் சுபாவத்தை பெறவில்லை என்று கேட்டார்'' இரண்டு விதமாக நான் அவருக்கு பதில் சொன்னேன். முதலில் தௌராத் ஷரீபி-ல் மூஸா நபி தகப்பனுடைய இரத்த வரிசையின் மூலமாகவே ஹராம் சுபாவம் பிரவேசித்தது என்றார். இரண்டாவதாக, ஒரு தாயின் வயிற்றில் குழந்தை இருக்கும்போது, தாயும், குழந்தையும் இரத்தத்தை பகிர்ந்து கொள்வதே இல்லை. குழந்தை மற்றும் தாயின்

இரத்தங்கள் ஒன்றாக கலக்குமானால் இரண்டு பேருமே செத்து போவார்கள். மேலும் குழந்தையின் இரத்த குரூப் அதை பெற்ற தாய்க்கு இருப்பதில்லை என்பதை மருத்துவர்கள் அறிவிக்கின்றனர். அல்லாஹ் குழந்தையின் இரத்தத்தை ஒரு ஆணின் வித்திலிருந்து உருவாக்குகிறார்.

குர்-ஆனை வாசிப்பதில் ஏற்படுகிற இன்பத்தை உங்களால் இப்பொழுது புரிந்து கொள்ள முடிகிறதா? அபிஷேகம் பண்ணப்பட்டு வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட ஈஸா அல்லாஹ்வின் வார்த்தையாகவும், ஆவியாகவும் இருக்கிறார் என்பதையும் அவர் பாவமில்லாதிருக்கிறார் என்பைதையும் நான் கண்டுபிடித்தபோது அது எனக்கு மனத்தெளிவை தந்தது.

**காத்திருங்கள், இன்னும் அதிகம் இருக்கிறது.........**

**3:48** மேலும் (அல்லாஹ்) அவருக்கு (ஈஸாவுக்கு) வேதத்தையும், ஞானத்தையும், தவ்றாத்தையும், இன்ஜீலையும் (சுவிசேஷம்) கற்பிப்பான்.

அல்லாஹ் ஈஸாவிற்கு தூய கித்தாப்-பை கற்பித்தார். பக்கா (சரியான) முஸ்லீம்கள் எல்லா கித்தாப்களையும் படித்து புரிந்துகொள்வார்கள். அல்லாஹ் முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுக்கு சொன்ன அறிவுரை, ஜன்னத்திலிருந்து வந்த செய்தியில் ஏதாகிலும் உமக்கு கேள்வி இருக்குமானால் ''முன்னுள்ள'' இத்த கித்தாக்களை ஓதுபவர்களிடம் நீ உன் கேள்விக்கு பதிலை பெற்றுக் கொள்ள வேண்டுமென'' கூறினார்.

சூரா யூனுஸ் 10:94 ''நாம் உங்களுக்கு (முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம) அருட்செய்திருக்கும் இதில் (சிறிதும் சந்தேகம்கொள்ளாதீர்கள்.) நீங்கள் சந்தேகித்தால் உங்களுக்கு முன்னர் அருளப்பட்ட வேதங்களை ஓதுபவர்களிடம் நீங்கள் கேட்டுப் பாருங்கள். நிச்சயமாக உங்கள் இறைவனிடமிருந்தே உண்மை(யான இவ்வேதம்) உங்களிடம் வந்தது. ஆதலால் சந்தேகப்படுபவர்களின் நீங்களும் (ஒருவராக) ஆகிவிடவேண்டாம்.

ஞானத்தின் புத்தகம் (மிசால்), தௌராத் மற்றும் இன்ஜில் கித்தாப்களை நான் கண்டுபிடித்தேன். இந்த கித்தாப்களை



நேரடியாக மூல பாஷையிலிருந்து மொழிபெயர்ப்பு செய்யப்பட்டு நம்பத்தகுந்ததாக இருக்கிறது ''முன்னுள்ள'' கித்தாப்களை ஓதும் போது **<u>ஒரு சரியான</u>** முஸ்லீம் ஆக என்னையே நான் உணருகிறேன் என்று என் நண்பர் ஒருவர் என்னிடம் கூறினார். ஒரு பசுமாடு தன்னுடைய ஒரே காலால் நிற்கமுடியாது, ஆனால் நான்கு கால்களோடு அது நிற்கும்போது உறுதியாய் நிற்க முடியும். ஒரு ''பக்கா'' முஸ்லீம் எல்லா கித்தாப்களையும் வாசிப்பார்.

சூரா 4:136 ''நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும், அவன் தன்னுடைய தூதர்மீது அருளிய இவ்வேதத்தையும், இதற்கு முன்னர் அவன் அருளிய வேதங்களையும் நம்பிக்கை கொள்ளுங்கள். எவன் அல்லாஹ்வையும், அவனுடைய மலக்குகளையும், அவனுடைய வேதங்களையும், அவனுடைய தூதர்களையும், இறுதி நாளையும் நிராகரிக்கின்றானோ அவன் நிச்சயமாக வெகு தூரமான வழி கேட்டில்தான் செல்கின்றான்.

''முன்னர்'' அருளப்பட்ட கித்தாப் மாற்றப்பட்டுள்ளதா? இல்லை என்று குர்-ஆன் சொல்லுகிறது. தன்னுடைய செய்தியை பாதுகாக்க அல்லாஹ்வுக்கே போதுமான வல்லமை இல்லையா?

குர்-ஆன் சூரா அல்-அன்ஆம் 6:115-116-ஐ ஓதுவோம். (முகம்மது ஸல்லல்லாஹு அலைஹிவஸல்லம் அவர்களுக்கு உங்களின் இறைவனின் வாக்கு உண்மையாகவும் நீதமாகவம் முழுமையாகிவிட்டது. **<u>அவனுடைய வாக்குகளை மாற்றுபவன் யாருமில்லை.</u>** அவன் செவியுறுபவனாகவும் நன்கறிந்தவனாகவும் இருக்கிறான்.

அடுத்தமுறை யாராவது ஒருவர் உங்களிடம், கித்தாப் மாற்றப்பட்டுள்ளது என்று சொன்னால் ''கித்தாப் மாற்றப்பட்டதிற்கு உங்களிடம் ஆதாரம் இருக்கிறதா? என்று கேளுங்கள். இல்லை என்னிடம் ஆதாரம் இல்லை, அவர்கள் அதை மாற்றிவிட்டார்கள் என்றுதான் நான் கேள்விப்பட்டேன் என்பதே எப்பொழுதும் அவர்களின் பதிலாக இருக்கும், இந்த விவாதம் எந்த நீதிமன்றத்திலும் செல்லுபடி ஆகாது.

**3:49** இஸ்ராயீலின் சந்ததிகளுக்கு ஒரு தூதராகவும் ஆக்குவான். ''நிச்சயமாக நான் உங்கள் இறைவனிடமிருந்து உங்களுக்கு ஒரு அத்தாட்சி கொண்டு வந்திருக்கின்றேன்.



உங்களுக்காக களிமண்ணிலிருந்து பறவையைப் போல செய்து அதில் நான் ஊதுவேன். அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு அது (பறக்கும்) பறவை ஆகிவிடும். பிறவிக் குருடனையும் வெண்குஷ்டரோகியையும் நான் குணப்படுத்துவேன். அல்லாஹ்வின் அனுமதியைக் கொண்டு **<u>மரணித்தோரையும்</u>** நான் உயிர்ப்பிப்பேன். நீங்கள் புசித்தவைகளையும், உங்கள் வீட்டில் நீங்கள் சேகரித்து வைத்திருப்பவைகளையும் நான் உங்களுக்கு அறிவிப்பேன். மெய்யாகவே நீங்கள் நம்பிக்கை கொண்டவர்களாக இருந்தால் இதில் உங்களுக்கு ஒரு அத்தாட்சி இருக்கிறது.

ஈஸா களிமண்ணிலிருந்து உயிருள்ள பறவையை படைத்ததை நான் ஓதும்போது அல்லாஹ் ஆதமை படைத்த நிகழ்ச்சி என் ஞாபகத்திற்கு வருகிறது. இந்த சம்பவத்திலிருந்து அல்லாஹ் 'ஈஸாவிற்கு' உயிரை உருவாக்குகிற வல்லமையை கொடுத்திருந்தார். அல்லாஹ்வின் வல்லமையோடு ''ஈஸாவும் வெண்குஷ்டரோகிகளை சுகமாக்கினார். பிறவிக்குருடனையும் சுமாக்கினார், அதுமட்டுமல்ல **<u>ஈஸா மரித்தோரையும் உயிரோடு எழுப்பினார்.</u>**

இந்த ஆயத்தை ஓதியவுடன் மறுபடியும் என் ஆத்துமா நம்பிக்கையால் நிறைந்தது. மரணம் மற்றும் ஜீவனை அளிக்கும் வல்லமையான திறவுகோல் ஈஸாவிற்கு கொடுக்கப்பட்டிருந்தது. **சாவின் மீது வல்லமை** இது ஒரு ஆச்சரியம்! மரணம்தான் இந்த துனியாவில் என்னுடைய மிகப்பெரிய எதிரி என்று முன்பு நினைத்தேன். ஆனால் இப்பொழுதோ மரணத்தின் மேல் வல்லமை ஈஸாவிற்கு இருப்பதை குர்-ஆனில் அறிந்து கொண்டேன். நம்முடைய மிகப்பெரிய கடைசி எதிரியான மரணத்தை ஜெயிக்கிற ஒரு நபிக்காக இந்த துனியா (உலகம்) இதுவரை காத்துக் கொண்டிருக்கிறது. ஈஸாவிற்கு மரணம் மற்றும் ஜீவனை அளிக்கிற வல்லமை கொடுக்கப்பட்டிருந்தால் அவரால் எனக்கு என்ன செய்ய முடியும்?

**3:50** என் முன்னால் உள்ள தவ்றாத்தையும் நான் உண்மையாக்கி வைத்து உங்களுக்கு விலக்கப்பட்டவைகளில் சிலவற்றை உங்களுக்கு ஆகுமாக்கி வைப்பதற்காகவும் உங்கள் இறைவனிடமிருந்து அத்தாட்சியை உங்களிடம் கொண்டு



வந்திருக்கின்றேன். ஆகவே, நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து என்னை பின்பற்றுங்கள்.

''முன்னுள்ள கித்தாப்களில்'' தன்னுடைய வாழ்க்கையைப்பற்றி நபிமார்கள் சொன்னவைகள் சரியென நிரூபித்து காட்டுவதாகவும் அல்லது உறுதி செய்யபட்டவையாகவும் இருப்பதாகவும் ஈஸா சொல்கிறார். மூலப்பிரதியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்ட ''முன்னுள்ள கித்தாப்களை'' நான் வாசிக்கும்போது பழைய நபி மார்கள் ஈஸாபைப்பற்றி அதிகமாக பேசியிருக்கிறார்கள். ஈஸாவை பற்றி முந்நூறு முன்னறிவிப்புகளுக்கும் மேலாக நான் கண்டுபிடித்தேன்.

அல்லாஹ்வுக்கு கீழ்படிவதே (ஈஸா) நம்முடைய வேலை என்று ஈஸா சொல்லியிருக்கிறார். அல்லாஹ்வுக்கு அதிகமான கனத்தை கொடுக்கவேண்டுமானால் நீங்கள் ஈஸாவிற்கு கீழ்ப்படிய வேண்டும். குர்-ஆன் 3:50-ல் நாம் கண்டுபிடிக்கும் ஈஸா கொடுக்கிற ஒரே கட்டளை ''எனக்கு கீழ்ப்படியுங்கள்'' (ஈஸா) என்பது மிகத்தெளிவான கட்டளையாக இருக்கிறது 'ஈஸாவிற்கு' கீழ்ப்படிவதினால் வரும் ஆச்சரியமான முன் அறிவிக்கப்பட்ட ஆசீர்வாதங்களை நீங்கள் பார்ப்பீர்கள்.

ஈஸாவின் கட்டளைகளை நாம் எங்கே கண்டுபிடிக்கலாம்? அவைகளை இன்ஜிலில் பார்க்கலாம். நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்று ஈஸா கட்டளை இட்டதை தெரிந்து கொள்ளாமல், எப்படி அல்லாஹ்வுக்கு அஞ்சி ஈஸாவுக்கு கீழ்படிய முடியும். ஈஸாவிற்கு எப்படி கீழ்படிய வேண்டும் என்பதை, இன்ஜில் சொல்வதை கவனித்தால்தான் தெரியும். முகம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் பயன்படுத்தின அதே இன்ஜில் புத்தகம் இன்றைக்கும் நம்மிடையே உள்ளது.

நீங்கள் இன்ஜிலை பார்த்தால் முதல் நூற்றாண்டின் மூலப்பதிப்பில் எழுதப்பட்டு மூல பாஷையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டதுதானா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள்.

**3:51** நிச்சயமாக அல்லாஹ்தான் என் இறைவனும், உங்கள் இறைவனும் ஆவான். ஆகவே, அவனையே வணங்குநக்ள், இதுதான் நேரான வழி. ஒரு சாலையோ அல்லது ஒரு பாதையே எப்பொழுதும் நம்மை சிலவற்றிற்கு அல்லது ஒருசிலருக்கு நேராக

நடத்தும். அல்லாஹ்வுக்கு நேராக நம்மை வழிநடத்துகிற பாதையைத்தான் இங்கு நேரான பாதை (தரிகா) என்று சொல்லப்பட்டிருக்கிறது. இது அல்லாஹ்விற்கு நேரான பாதையாக இருக்கிறது. அங்கே புறவழிச் சாலைகளோ அல்லது வளைவுகளோ இல்லை. இது ஒரு நேர்வழி பாதையானதால் அது செல்லவேண்டிய இலக்காகிய ஜன்னத்திற்கு செல்லுவதற்கு முன் நின்றுவிடுவதில்லை. எனவே யார் இந்த பாதையில் பிரயாணம் பண்ணி அல்லாஹ்விடம் செல்வார்?.

நான் தேவையான நன்மைகளை செய்தால் அல்லாஹ் என்னை அவரோடு இருக்கும்படி ஜன்னத்திற்கு அழைத்து செல்வார் என்று மற்றவர்கள் சொல்வதைநீங்கள் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? இப்படி சொல்லுகிறவர்கள் குருடனும், அல்லாஹ்வின் தூய்மைக்கு அவமானமாகவும் இருக்கின்றனர். நீங்கள் எத்தனை நம்மைகளை செய்தாலும் அவைகள் ஒன்றும் பெரிதல்ல. உங்கள் பாவங்களை உங்களால் நீக்கமுடியாது. அல்லாஹ் 100% பரிசுத்தமானவர். அவர் சமூகத்தில் எந்த பாவமும் வரமுடியாது. ஒரே ஒரு பாவத்தினாலே அல்லாஹ்வுடைய சமூகத்திலிருந்து ஆதம் வெளியேற்றப்பட்டார் என்பதை நினைவில் வையுங்கள். 99.9% பரிசுத்தமானவர்கள் ஜன்னத்திற்கு போக முடியாது. உன்மையில் 99.9% பரிசுத்தம் என்பதே ஒருபோதும் இல்லை. பரிசுத்தம் எப்பொழுது 100% தங்கள் பாவங்களை முற்றிலுமாக நீக்கியவர்கள் மட்டுமே அல்லாஹ்வுடன் இருக்கும்படி போகமுடியும். இது மிகவும் துக்கமான ஒரு செய்தி. ஏனென்றால் நாம் எல்லோரும் பாவம் செய்திருக்கிறோம். நாம் முற்றிலுமாக பாவத்திலிருந்து விடுபட்டு பரிசுத்தமாகி, நம்முடைய பாவ சுபாவத்தை விட்டு விலக நமக்கு இருக்கும் ஒரே நம்பிக்கை அல்லாஹ் நமக்காக ஒருவழியை உருவாக்குவார் என்பதே.

**3:52** அவர்களில் பலர் நிராகரிப்பதை ஈஸா உணர்ந்தபோது ‘‘அல்லாஹ்வுக்காக எனக்கு உதவி செய்பவர் யார்? எனக் கேட்டார். அவருடைய தோழர்கள் ‘‘நாங்கள் அல்லாஹ்வுக்காக உதவி செய்கின்றோம். மெய்யாகவே! அல்லாஹ்வை நாங்கள் நம்பிக்கை கொள்கிறோம் (ஆதலால்) நிச்சயமாக நாங்கள் முற்றிலும் அவருக்கு வழிபட்டோம் என்பதை நீங்கள் சாட்சி கூறுங்கள் என்று கூறினார்கள்.



**3:53** ‘‘எங்கள் இறைவனே! நீ அருட்செய்ததை நாங்கள் நம்புகின்றோம். இத்தூதரையும் நாங்கள் பின்பற்றி நடக்கின்றோம். ஆதலால் (ஈஸாவை) உண்மைப்படுத்தியவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக!’’.

உலகத்தின் எல்லா ஜனங்களும் அல்லாஹ்வை தொழவேண்டும் என்பதற்காக சிலரை உதவி செய்ய முடியுமா என்று ஈஸா கேட்கிறார். ஈஸாவிற்கு உதவி செய்யும்படி முஸ்லீம் ஆண்கள் ஒரு சிறு குழுவாக வந்தனர். அல்லாஹ்வின் செய்தியையும், அவர் இந்த துனியாவுக்கு அனுப்பின செய்தியாளர் ஈஸாவையும் நம்புகிறோம் என்றனர் ‘ஈஸாவை பின்பற்றுபவர்கள் முஸ்லீம்கள்!’’

**3:54** (ஈஸாவை நிராகரித்து) அவர்கள் (அவரைக் கொலை செய்ய) சதி செய்தார்கள். அல்லாஹ் சதி செய்து விட்டான் அல்லாஹ் சதி செய்பவர்களில் மிக மேலானவன்.

ஷைத்தான் அல்ஹக்கை (உண்மையை) வெறுப்பவன். எனவே ஜனங்கள் உண்மையை கேட்காமல் இருக்க அவன் என்ன வேண்டுமானாலும் செய்வான். சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ புரிந்து கொள்ளாமல் எவ்வளவு காலமாக நீங்கள் குரானை ஓதிக்கொண்டிருக்கிறீர்கள்? நீங்கள் குரானை **படித்தால்** அதை குறித்து ஷைத்தான் கவலைப்படுவதில்லை. ஆனால் நீங்கள் குரானை **புரிந்து கொண்டால்** ஷைத்தானுக்கு மிகுந்த கவலை. உலகத்திலுள்ள எல்லாரும் அல்ஹக்கை (உண்மையை) அறிய அல்லாஹ் திட்டம் வைத்திருக்கிறார். இப்லீஸ் ஜெயிப்பதை அல்லாஹ் ஒரு நாளும் அனுமதிக்கமாட்டார்.

ஈஸாவின் மரணத்தில் இரண்டு திட்டங்கள் இருக்கிறது. யூதர்கள் ஈஸாவை கொல்ல திட்டம் தீட்டினார்கள். ஈஸாவின் மரணத்தில் ஈஸாவும், அல்லாஹ்வும் ஒரு திட்டம் வைத்திருந்தனர். ‘‘ஈஸா மரிக்கவில்லை என்று குர்-ஆன் எங்கேயாவது சொல்லியிருக்கிறதா? இல்லை சூரா பெண்கள் 4:157-ல் யூதர்கள் அவரை கொல்லவோ அல்லது சிலுவையில் அறையவோ இல்லை என்றனர். கவனியுங்கள் ‘‘ஈஸா மரிக்கவே இல்லை’’ என்று இந்த ஆயத்து சொல்லவில்லை, இன்னொன்றையும் கவனிக்கவேண்டும். யூதர்கள் யாரையும் மரண தண்டனை அனுபவிப்பதை அனுமதிக்க மாட்டார்கள். ரோமர்கள்தான் இதை செய்வார்கள். ‘‘ஈஸா



மரிக்கவில்லை’’ என்று குர்-ஆன் சொல்லுவதாக நீங்கள் நினைத்தால் பின்வரும் ஆயத்தை படியுங்கள்.

**3:55** அல்லாஹ் கூறியதை ஞாபகப்படுத்துங்கள்: ஈஸாவே (இயேசு) நிச்சயமாக நான் உங்களுக்கு ஆயுளை முழுமை செய்வேன், உங்களை நம்மளவில் உயர்த்திக் கொள்வேன். நிராகரிப்பவர்களிலிருந்து உங்களை பரிசுத்தமாக்கி வைப்பேன். உங்களை பின்பற்றுபவர்களை நிராகரிப்பவர்கள் மீது இறுதிநாள் வரையில் மேலாக்கியும் வைப்பேன். என்னிடமே நீங்கள் பின்னும் வருவீர்கள். நீங்கள் தர்க்கித்துக் கொண்டிருப்பவைகளைப்பற்றி நான் உங்கள் கையில் தீர்ப்பளிப்பேன். 55-ஆம் ஆயத்தை அரபியில் படிக்கும்படி உங்கள் இமாமை கேளுங்கள், அவர் வாசிப்பதை நன்றாக கவனித்தால் ‘‘முத்தவபீக்க’’ என்ற அரபு வார்த்தையை அவர் வாசிப்பிலிருந்து கேட்பீர்கள். முத்தவபீக்க என்ற வார்த்தையின் வேராக ‘தவாபா’’ என்ற வார்த்தை உள்ளது. இந்த வர்த்தையின் அர்த்தம் ‘‘மரிப்பது’’ அல்லது ‘‘மரிக்க ஒப்புக் கொடுப்பது’’ ஆகும். ‘‘தவாபா’’ என்ற வார்த்தை குர்-ஆனில் 26 முறை வருகிறது. இதில் 24 முறை ‘‘மரிப்பது’’ அல்லது ‘‘மரிக்க ஒப்புகொடுப்பது’’என்றும், ‘‘நித்திரை அளிப்பேன்’’ என்று இரண்டு முறையும் மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. ‘‘உயர்த்திக் கொள்ளுவேன்’’ என்ற அர்த்தத்தில் எப்பொழுதும் மொழிபெயர்ப்பு செய்யப்படவில்லை. மற்ற மொழிகளில் குர்-ஆனை மொழி பெயர்ப்பு செய்யும் மொழிபெயர்ப்பாளர்கள் அரபு குர்-ஆனில் இருப்பதை அப்படியே தவறாமல் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும். எனவே 55-ம் ஆயத்தை சரியாக மொழிபெயர்ப்பு செய்தால் அது ‘‘அல்லாஹ் கூறியதை ஞாபகபடுத்துங்கள், ‘‘ஈஸாவே நிச்சயமாக நான் உங்களை மரிக்க செய்வேன் பிறகு என்னிடத்திற்கு எழுப்பிக் கொள்வேன்....’’ என்று இருக்க வேண்டும்.

சூரா மர்யம் 19:33-ல் ‘‘நான் பிறந்த நாளிலும், நான் மரணிக்கும் நாளிலும், நான் உயிர் பெற்றெழும் நாளிலும் சாந்தியும், சமாதானமும் என்மீது நிலை பெற்றிருக்கும்’’ என்று ‘ஈஸா’ தன்னைப்பற்றி சொல்லியிருக்கிறார். உயிர் பெற்றெழும் என்றார் ‘‘மரணத்திலிருந்து எழுப்பப்படுவது’’ இது அல்லாஹ்வின் பரிபூரணமான திட்டம். ஆனால் ஏன் அல்லாஹ் ஈஸாவை கொல்ல வேண்டும்? இதற்கு பதிலை நான் பிறகு சொல்கிறேன். இப்பொழுது ‘ஈஸா எழுப்பப்பட்டார் என்று 55-ம் ஆயத்து அறிவிக்கிறது.



அல்லாஹ் 100% பரிசுத்தமானவர் என்பதை ஞாபகத்தில் வையுங்கள். யாராவது ஒருவர் அல்லாஹ்விடத்தில் நேரடியாக கொண்டுவரப்பட்டால், அல்லாஹ்வைப் போல அவர்களும் 100% பரிசுத்தமாகத்தான் இருக்க வேண்டும். எந்த அசுத்தமும் அல்லது ஹராம் செய்த மனிதனும் அல்லாஹ்வின் சமூகத்தில் வரவே முடியாது.

**ஈஸாவின் வாழ்க்கைத் தொகுப்பை இங்கே பாருங்கள்:**

- ஆதமின் ஹராம் சுபாவம் இல்லாதவராய் பிறந்தார்.
- பரிசுத்தமாய் வாழ்ந்தார் மற்றும் ஹராமில்லாமல் வாழ்ந்தார்
- உயிரின் மீதும், மரணத்தின் மீதும் அல்லாஹ் ஈஸாவிற்கு வல்லமையை கொடுத்தார்
- அல்லாஹ்வினிடத்திற்கு நேர் பாதையில் (தாரிக்கா) ஈஸா பிரயாணம் பண்ணினார்
- ஈஸா இப்போது அல்லாஹ்வுடன் இருக்கிறார்.

இந்த உண்மை நேரடியாக குர்-ஆனில் இருந்து நமக்கு வருகிறது. பக்கா முஸ்லீம்கள் இந்த உண்மையை புரிந்து கொண்டவர்கள்

இன்ஜில் ஷரி∴பி-ல் ‘தன்னைப்பற்றி ஈஸா ஒரு உறுதியாக சொல்லியிருக்கிறார்’ ‘‘நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்’’ என்று அவர் சென்னார். (யுஹொன்னா 14:6) அல்லாஹ்விடம் செல்ல ‘ஈஸாவிற்கு வழிதெரியும். ஏனென்றால், அவர் நேர் பாதையில் (தாரிக்கா) பிரயாணம் பண்ணி அல்லாஹ்விடம் சென்றார் என்ற இன்ஜில் ஷரி∴ப் ஆயத்தை சூரா ஆல இம்ரான் 3:42-55 உறுதிப்படுத்துகிறது.

‘‘ஈஸா அல்ஹக்கானவர் (சத்தியமுள்ளவர்), ஏனென்றால் அவர் அல்லாஹ்வின் வார்த்தையானவர். அல்லாஹ்வின் வார்த்தை எப்பொழுதும் சத்தியமானவை. ஈஸாவே ஹய் (ஜீவன்) ஏனென்றால் மரணத்தின் மீது வல்லமையை அவருக்கு அல்லாஹ் கொடுத்தார்.

**ஜன்னத்திற்கு ஒரே நேர் பாதை (தாரிக்கா)**

பயணம் செய்யும் போது கண்பார்வை இழந்தவர்களுக்கு மற்றவர்களின் உதவி தேவை. சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ நான் வாசிக்கிற வரை, நான் என்னை ஒரு ‘‘ஆவிக்குரிய’’ குருடனாக

இருப்பதை உணர்ந்தேன். ஜன்னத் செல்லும் நேர் பாதை (தாரிக்கா) யை நான் பார்க்க முடியாதபடி என்னுடைய பொல்லாத மற்றும் ஹராம் சுபாவம் என்னை தடுத்தது. யாராவது ஒருவர் எனக்கு உதவி செய்ய வேண்டும், வழியை தெரிந்த ஒருவர்தான் எனக்கு உதவி செய்ய வேண்டும், இன்னொரு குருடர் எனக்கு உதவி செய்வதில் எனக்கு எந்த பயனும் இல்லை. முன்பே நேர்பாதையில் (தாரிக்கா) பிரயாணம் பண்ணி ஜன்னத்தை தன் வீடாக கொண்ட ஒருவர் தான் எனக்கு ஜன்னத்திற்கு சரியான நேர் வழி காட்ட முடியும்.

நாம் ஜன்னத் போக ஈஸாவால் உதவி செய்ய முடியுமா? சூரா ஆல இம்ரான் 3:42-55-ஐ அல்லாஹ்வின் விசேஷமான செய்தி என்று நான் நம்புகிறேன். இதில் இருக்கிற அற்புதமான ஒரு செய்தி, ஜன்னத்திலிருந்து ஒரு நபி இறங்கி வந்து, ஒரு மனிதனாக இந்த துனியாவில் வாழ்ந்து, பிறகு தன் வீடாகிய ஜன்னத்திற்கு திரும்ப சென்றார். ஆம் ஈஸா நமக்கு உதவி செய்ய முடியும் என்று நான் கட்டாயம் ஈமான் (நம்புகிறேன்) கொள்கிறேன்.

இந்த சிறு புத்தகத்தின் ஆரம்பத்தில், குர்-ஆனில் இருந்து ஒரு ஆயத்தை சொன்னேன், அதன் பிறகு நான் ஒரு கேள்வியை கேட்டேன். அந்த கேள்விக்கு பதில் சொல்லக் கூடிய சரியான நேரம் இதுதான்.

சூரா அல் மாயிதா 5:83 "தவிர தூதர்மீது அருளப்பட்டவைகளை செவியுற்றால் உண்மையை அவர்கள் உணர்வதன் காரணமாக அவர்களின் கண்கள் கண்ணீர் வடிப்பதைக் காண்பீர்கள். அன்றி "எங்கள் இறைவனே! நாங்கள் நம்பிக்கை கொண்டோம். ஆகவே, சாட்சி கூறுபவர்களுடன் எங்களையும் நீ பதிவு செய்து கொள்வாயாக! என்றும் கூறுகின்றனர். இந்த ஆயத்தில் **அவர்கள்** என்பவர்கள் யார்? என்றுதான் நான் கேள்வி கேட்டிருந்தேன். 'ஈஸாவை பின்பற்றுகிற 'பக்கா' அல்லது 'சரியான' முஸ்லீம்கள் என்று தங்களை அழைத்துக்கொள்கிறவர்களே **"அவர்கள்"** ஆகும்.

**ஜன்னத் செல்வதற்கு நீங்கள் ஈஸாவை எப்படி பின்பற்றுவீர்கள்**

அல்லாஹ் உங்களை நேசிக்கிறார், நீங்கள் மௌத் ஆன பிறகு தன்னோடு நீங்கள் ஜன்னத் வர வேண்டுமென விரும்புகிறார்.



ஆனால் நீங்கள் ஜன்னத் போக வேண்டுமானால் உங்களில் உள்ள ஹராம்கள் முழுவதுமாக உங்களை விட்டு நீக்கப்பட வேண்டும். இந்த ஹராம் பிரச்சனையை தீர்ப்பதற்கு நம்மை விட்டு ஹராமின் சாபம் நீங்கவும் முழுமையான ஹராமிலிருந்து மன்னிப்பு நமக்கு கிடைக்கவும் அல்லாஹ் ஒரு வழியை நமக்காக உருவாக்கினார். ஆதமில் தொடங்கி பலிசெலுத்தும் முறையாகிய "கொர்பானியை" செலுத்துபவர்களின் ஹராம்கள் மன்னிக்கப்படும். யாருடைய ஹராம்கள் மன்னிக்கப்பட்டு, நீக்கப்பட்டிருக்கிறதோ அவர்கள் மௌத் (மரணம்) ஆன பிறகு நேரடியாக அல்லாஹ்வுடன் இருக்கும்படி ஜன்னத் செல்ல முடியும்.

நாம் செய்த ஹராம்களுக்கு (பாவங்கள்) நமக்கு கிடைக்க வேண்டிய தன்டனையை கொர்பானி சித்தரிக்கிறது. ஒரு நீதிபதிக்கு முன்பு நீதிமன்ற அறையில் நீங்கள் நிற்பதாக எண்ணிக்கொள்ளுங்கள். நீதிபதி நீதியும் நியாயமும் உள்ளவர். உங்கள் ஹராமினிமித்தம் நீதிபதி உங்களுக்கு மரண தண்டனை கொடுத்து நியாயம் தீர்த்தார். நீங்கள் குற்றவாளியாக இருந்தாலும் நீங்கள் பெற வேண்டிய தன்டனையை தன்மீது ஏற்றுக்கொள்ள ஹராமில்லாமல் பரிசுத்தமான ஒருவரை அல்லாஹ் ஏற்படுத்தினார். உங்கள் தன்டனையை அல்லாஹ் தூரமாக விலக்கினதால் அவர் நீதியுள்ள நியாயாதியாக இருக்க முடியாது. ஒவ்வொரு குற்றத்திற்கும் தண்டனை கிடைக்க வேண்டும், அதுதான் நீதி. உங்கள் ஹராமின் குற்றத்திற்காக நீங்கள் மரண தன்டனைக்கு தகுதியாக இருக்கிறீர்கள்.

கொர்பானி தரும் முறையை சிந்தனை செய்து பாருங்கள். முதாலவதாக, சுத்தமான மிருகத்தை கண்டுபிடிக்க வேண்டும். வியாதிப்பட்ட அல்லது தரம் குறைந்த மிருகத்தை கொர்பானிக்காக பயன்படுத்தக் கூடாது. கொர்பானி கொடுப்பதற்கு முன்பு நாம் செய்ய வேண்டிய துஆ என்னவென்றால், "அல்லாஹ் நான் உமக்கு எதிராக (பாவம்) ஹராம் செய்து, குற்றவாளியாக இருக்கிறேன். நான் மௌத் (மரணம்) ஆகும் வரை என்னிலிருந்து இரத்தம் சிந்திக்கொண்டே இருக்க நான் பாத்திரனாக இருக்கிறேன். எனவே அல்லாஹ்வே, என் இரத்தத்தை என்னிலிருந்து எடுக்காமல், என்மீது இரக்கமாயிருந்து இந்த ஹராமறியாத மிருகத்தின் இரத்தத்தை எடுத்துக்கொள்ளும் என்பதாகும்.

ஆதமின் நாட்களிலிருந்து 'ஈஸாவின் நாட்கள் வரைக்கும்



கொர்பானி கொடுக்கப்பட்டு வந்தது. கொர்பானிக்கு எப்பொழுதும் மிருகத்தின் இரத்தம்தான் வேண்டுமென அல்லாஹ் கேட்கவில்லை. வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தன்னுடைய மகனை கொர்பானி தரும்படி இப்ராஹூமை அல்லாஹ் கேட்டார். கடைசி நேரத்தில் மகனை பலிசெலுத்த வேண்டாமென இப்ராஹூம் அல்லாஹ்வினால் கேட்டுக்கொள்ளப்பட்டார். தனக்காக இப்ராஹூம் கொண்டுள்ள அன்பையும் மற்றும் அர்ப்பணத்தையும் அல்லாஹ் சோதித்தார்.

நான்கு கித்தாப்களையும் வாசிக்கும் பக்கா முஸ்லீம்கள் கொர்பானியை குறித்து மிகத்தெளிவாக புரிந்து வைத்திருக்கிறார்கள். 'ஈஸாவை பின்பற்றுகிற முஸ்லீம்கள் கொர்பானி கொடுப்பதை நிறுத்தி விட்டர்கள் ஏன்?

இந்த துனியாவில் கடந்தகால, நிகழ்கால, எதிர்காலத்தில் வாழும் எல்லா ஜனங்களுக்காக அல்லாஹ் தர வேண்டிய மிகக் கடைசியான கொர்பானிக்கு நிழலாட்டமாகத்தான் கொர்பானி இருக்கிறது என்று பக்கா முஸ்லீம்கள் அறிந்திருக்கிறார்கள். பாவத்தின் சாபத்திலிருந்து முழுமையான விடுதலையை நாம் பெறும்படி இந்த துனியாவின் அனைத்து ஜனங்களுக்காவும் கொர்பானியை கொடுத்தது மனுக்குலத்தின் மீது அல்லாஹ் வைத்த அன்பையும் நமக்கு கெடுக்கிற நிச்சயத்தையும் வெளிப்படுத்துகிறது. ஆனால் இந்த துனியாவின் எல்லா ஜனங்களுக்காக அல்லாஹ் எதை தன்னுடைய கொர்பானியாக கொடுப்பார்?.

ஈஸாவின் பிறப்பு துனியாவிற்கு (உலகிற்கு ஒரு அடையாளம் என்று குர்-ஆன் சொல்லுகிறது. துனியாவின் எல்லா ஜனங்களுக்காக அல்லாஹ் கொடுக்கிற கொர்பானி அதிக தூய்மையும், பரிசுத்தமும், இருக்கிறவைகளிலேயே மிகச் சிறப்பானதாக வல்லமையுள்ளதாக அல்லாஹ்விற்கு தேவைப்பட்டது. ஹராம் அறவே இல்லாத, மிகவும் தூய்மையான ஈஸாவின் இரத்தம்தான் இந்த துனியாவிற்கு போதுமான வல்லமையுள்ளது என்று குர்-ஆனில் நாம் பார்த்தோம்.

வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தன் மகனுக்கு இப்ராஹூம் எதை செய்யக்கூடாது என்று அல்லாஹ் நினைத்தாரோ, அதையே அல்லாஹ் ஈஸாவிற்கு செய்தார். ஹராமே செய்யாத ஒருவர் குற்றவாளிக்காக தன் இரத்தத்தை சிந்தினாரே அதுதான் நாம்



எங்குமே பார்க்க முடியாத இயல்பு நிலைக்கு மாறான அன்பின் அடையாளமாக இருக்கிறது. நாம் பெறவேண்டிய தண்டனையை ஈஸா ஏற்றுக்கொண்டார். பக்கா முஸ்லீம்கள் ஏன் நன்றியுள்ளவர்களாக இருக்கிறார்கள் என்று இப்பொழுது உங்களுக்கு தெரியும். நமக்கு தகுதியானதை அல்லாஹ் நமக்கு தரவில்லை என்பதை அவர்கள் அறிந்திருக்கிறார்கள். யுஹொன்னா 15:13-ல் இன்ஜில் சொல்லுகிறது "ஒருவன் தன் சிநேகிதருக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிற அன்பிலும் அதிகமான அன்பு ஒருவரிடத்திலுமில்லை.

இன்றைக்கு நீங்களும் பக்கா முஸ்லீம் ஆகலாம். உங்கள் இரத்தத்திற்கு பதில் அல்லாஹ் ஈஸாவின் இரத்தத்தை பயன்படுத்தினார் என்று நீங்கள் நம்பினால் போதுமானது. இப்போது நில்லுங்கள். உங்கள் கைகளை அல்லாஹ்வுக்கு நேராக உயர்த்துங்கள். என் பாவகுற்றத்தின் தண்டனையை மன்னிக்க நீர் கொடுத்த கொர்பனியாகிய 'ஈஸாவிற்காக' நன்றி. நான் அவரை ஏற்றுக்கொள்கிறேன் என்று தாழ்மையோடு அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள். இவ்விதமாய் அல்லாஹ் உங்கள் பாவங்களை மன்னித்து, பாவத்தின் சாபத்தை நீக்குவார். உங்கள் ஹராமிலிருந்து எப்பொழுது சுத்தமாகிறீர்களோ, அப்பொழுது நீங்கள் மரித்த பிறகு அல்லாஹ்வுடன் இருக்கும்படி நீங்கள் போக முடியும். இப்பொழுது நீங்கள் உங்கள் வாழ்வை சமாதானத்துடன் வாழலாம், ஏனென்றால் மௌத் ஆனபிறகு நேரடியாக நீங்கள் அல்லாஹ்விடம் செல்ல முடியும்.

**இச்சிறு புத்தகம் இந்த துனியாவின் அனைத்து முஸ்லீம் நாடுகளில் நடக்கும் உண்மைச் சம்பவங்களின் பரதிபலிப்பாக இருக்கிறது.**